செய்தி வெயிடு எண்.14/2021 நாள் 22.06.2021

**மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் ராஜ்ய சபை பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆர்.எஸ்.பாரதி அவர்கள் மற்றும் மத்திய சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் திரு தயாநிதி மாறன், அவர்கள் வாரியத்தின் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.**

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பகுதி 1 முதல் 15 வரை மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ள தெருக்களில் அமைந்துள்ள கழிவுநீர் கட்டமைப்புகளை பருவமழைக்கு முன்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முழுமையாக தூர்வாருதல் மற்றும் பராமரிப்பு பணிகளை 21.06.2021 முதல் 30.06.2021 வரை 10 நாட்கள் மேற்கொண்டு வருகிறது. இப்பணிகளை வாரியத்தின் 254 தூர்வாரும் இயந்திரங்கள் 142 ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் 54 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் ஆக மொத்தம் 454 இயந்திரங்கள் முலம் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி வருகிறது.

மாண்புமிகு ஊரக தொழில் துறை அமைச்சர் திரு தா.மோ. அன்பரசன் அவர்கள் மற்றும் ராஜ்ய சபை பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆர்.எஸ்.பாரதி அவர்கள் ஆலந்துார் தொகுதிக்கு உட்பட்ட தில்லை கங்கா நகர் 24வது தெருவில் உள்ள வாரியத்தின் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை இன்று 22.06.2021 கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மத்திய சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் திரு தயாநிதி மாறன், அவர்கள் ஆயிரம் விளக்கு தொகுதிக்குட்பட்ட மக்கிஸ் கார்டன் பகுதியில் வாரியத்தின் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் பராமரிப்பு நுழைவு வாயில்களில் உள்ள கசடுகளை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகளை 21.06.2021 அன்று துவக்கி வைத்தார்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்